**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – மூளை முடக்குவாதத்தால் (Cerebral Palsy) பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டம்– 2016–17 ஆம் ஆண்டிற்கான தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்வது– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந. 2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.13

நாள்: 14–02–2017
துன்முகி, மாசி 2,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணை(1டி) எண்.32, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 04.03.2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.2994/இவாததி/ 2016, நாள் 22.07.2016.

--------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட 421 மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டத்திற்கு திட்டத் தொடராணையும், ரூ.26,39,670/– நிதி ஒப்பளிப்பும் செய்து, ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2016–17ஆம் நிதியாண்டில் மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு, 440 எண்ணிக்கையிலான மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் வாங்கி வழங்கிட ரூ.27,00,720/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்த பின்பு, அதனை ஏற்று, மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலிகள் வழங்கும் திட்டத்தை 2016–2017 ஆம் ஆண்டில் தொடர தொடராணையும், மேலும் 440 பயனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு சக்கர நாற்காலியின் ஒன்றின் விலை ரூ.6,138/– வீதம் 440 பயனாளிகளுக்கு ரூ.27,00,720/– (ரூபாய் இருபத்தேழு இலட்சத்து எழுநூற்று இருபது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், அரசு ஆணையிடுகிறது.

(i) மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட மடக்கு சக்கர நாற்காலிகள் (CP Chair) ஒன்றின் விலை ரூ.6,138/– என்ற வீதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வைத்திருப்போருக்கு மட்டுமே வழங்கப்படவேண்டும், மருத்துவ சான்று மட்டும் போதுமானதல்ல.

(ii) மடக்கு சக்கர நாற்காலிகளை (CP Chair) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி, திறந்த ஒப்பந்த புள்ளி மூலம் கொள்முதல் செய்து உபகரணங்களை பெற்ற பிறகு இதற்கான அத்தொகையை வழங்குமாறும் மேலும், அதற்கு முன்னர் சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அத்தொகையை முழுவதும் முன்பணமாகவோ அல்லது பகுதியாகவோ வழங்கப்படக் கூடாது என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235–சமூக பாதுகாப்பும் நலனும் 02 சமூக நலன் –101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – I– திட்டம் சாராதது–CO- மாற்றத் திறனாளிகள் மறுவாழ்வு திட்டம்–19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்".

(கு.தொ.கு 2235–02–101–CO-1917)

5. இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.4427/நிதி(சந)/2017, நாள்08.02.2017ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர்(துணிக்கை), தலைமைச் செயலகம், சென்னை–9.

**நகல்:-**
நிதித்(சந) /வ.செ.பொது–I)துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள்நலத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.